[பேராசிரியர் க. அன்பழகன்] [2010 நவம்பர் 12

இன்றையதினம் எழுப்பப்பட்ட இந்த கவன ஈர்ப்பிலேயும் சிமென்ட் விலை குறைக்கப்படவில்லையே, அதற்கு இந்த அரசு என்ன முயற்சி எடுத்தது என்று கேட்டிருக்கிறார்கள். தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் கடந்த மாதத்திலேயும், இந்த மாதத்தினுடைய தொடக்கத்திலேயும் இரண்டு முறை பேசிய அந்த விவரங்கள் இருக்கின்றன. உற்பத்தியாளர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, விலையைக் குறைத்தாக வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு வலியுறுத்தி, அவர்களும் ஓரளவுதான் எங்களால் முடியும் என்று சொல்லி, அதன் காரணமாக ஒரு மூட்டை 250 ரூபாய் என்ற அளவுக்கு அவர்கள் விற்பனையாளர்களுக்கு வழங்குவதாக ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அது போதாது, மேலும் குறைக்க வேண்டும் என்று தமிழக அரசின் சார்பாக கலைஞராலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நாங்கள் மறுபடியும் ஆலோசித்துத்தான் குறைக்க முடியும்; குறைப்பதைப் பற்றிச் சொல்ல முடியும் என்ற நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள். ஆனால், மக்களைக் கருதி, மக்களுடைய நலனைக் கருதி வெளிநாடுகளிலிருந்தோ, வேறு மாநிலத்திலிருந்தோ சிமென்ட்டை விலை குறைவாக வரவழைத்து, போக்குவரத்துச் செலவினம் சேர்ந்து விலை குறைவாக அடங்குமானால், எவ்வளவு விரைவில் அப்படி வரவழைக்க முடியுமோ, அப்படி வரவழைத்து அந்த சிமென்ட்டை மக்களுக்கு வழங்கலாம் என்று இந்த அரசு கருதிக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

திரு. கு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்தது, அவ்வளவுதான்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடு)

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-2011 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 156 முதல் 165 வரையிலான அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS